இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி


www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 262 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 21 – திங்கள்கிழமை 04 மே 2026 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 262 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 21 - Monday 04 May 2026 - Madurai 10 Pages ₹ 5.00

## சட்டமன்றத் தேர்தல்: தமிழ்நாடு உள்ளிட்ட

# 5 மாநிலங்களில் இன்று வாக்கு எண்ணிக்கை!



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (3.5.2026) அவரது இல்லத்தில், பேராசிரியர் அவர்களின் மகன் அ.அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ.வெற்றிஅழகன் ஆகியோர் சந்தித்தனர்.

## பலத்த பாதுகாப்புடன் காலை 8 மணிக்குத் தொடங்குகிறது!

**சென்னை, மே 4–**

**தமிழ்நாடு உள்ளிட்ட ஐந்து மாநிலங்களில் சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களின் வாக்கு எண்ணிக்கை இன்று காலை 8 மணிக்குத் தொடங்குகிறது.**

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு கடந்த மாதம் 23ஆம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

மொத்தம் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்காக 62 வாக்கு எண்ணும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்காக தொகுதிக்கு ஒன்று வீதம், 234 வாக்கு எண்ணும் அறைகளும், தபால் வாக்குகளை எண்ணுவதற்கு கூடுதல் அறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.



வாக்கு எண்ணிக்கைக்காக மொத்தம் 3 ஆயிரத்து 324 மேஜைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், ஒரு மேஜைக்கு தலா ஒரு மேற்பார்வையாளர், நுண் பார்வையாளர், உதவியாளர், கணினி பதிவாளர் ஆகிய 4 பேர் என்ற அடிப்படையில், ஒட்டுமொத்தமாக 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ளனர். இதுதவிர தேர்தல் ஆணையத்தின் விதிகள் முறையாக பின்பற்றப்படுவதை உறுதி செய்ய ஒரு தொகுதிக்கு ஒரு வாக்கு எண்ணும் பார்வையாளர் என்ற அடிப்படையில் 234 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். காலை 8 மணிக்கு வாக்கு எண்ணும் பணி தொடங்கப்படும் நிலையில், முதலில் தபால் வாக்குகள் எண்ணப்படுகின்றன. இதனைத் தொடர்ந்து வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி தொடங்கும். வாக்கு எண்ணும் மையங்களில் மூன்றடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. முதல் அடுக்கில், வாக்கு எண்ணும் அறைகள் மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு அறைகளின் முன் மத்திய பாதுகாப்பு படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். இரண்டாவது அடுக்கில் தமிழ்நாடு காவல்துறையினரும், மையத்தின் 100 மீட்டர் சுற்றளவில் 3வது அடுக்கில் ஆயுதப் படையினரும் நிறுத்தப்பட்டுள்ளனர்.

### தேர்தல் ஆணையம் ஆலோசனை

இதனிடையே தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கான இறுதி கட்ட ஏற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணையம் ஆலோசனை நடத்தியது. காணொளி மூலம் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் 234 தொகுதிகளுக்கான தேர்தல் பார்வையாளர்கள் பங்கேற்றனர். வாக்கு எண்ணிக்கை ஏற்பாடுகள், பாதுகாப்பு, தேர்தல் வாக்கு எண்ணிக்கை முடிவுகளை அறிவிப்பதற்கான நடைமுறைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து ஆலோசனை நடைபெற்றது. தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் இக்கூட்டத்தில் பங்கேற்றார்.

மேற்குவங்கம், கேரளம், அசாம் மற்றும் புதுச்சேரி சட்டப் பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் இன்று எண்ணப்படுகின்றன.

126 இடங்களைக் கொண்ட அசாம் சட்டப்பேரவை, 140 இடங்களைக் கொண்ட கேரள சட்டப் பேவை மற்றும் புதுச்சேரி சட்டப் பேரவையின் 30 தொகுகளுக்கும் கடந்த ஏப்ரல் 9ம் தேதி ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. 294 இடங்கள் கொண்ட மேற்குவங்க சட்டப்பேரவைக்கு ஏப்ரல் 23 மற்றும் 29ம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப் பதிவு நடைபெற்றது. இந்நிலையில், சட்டப் பேரவை தேர்தல் நடைபெற்ற தமிழ்நாடு உள்ளிட்ட இந்த 5 மாநிலங்களிலும் மிகுந்த எதிர்ப்பார்ப்புடன் இன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறவுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி தொடரும்!

வாக்குப் பதிவுக்கு பின்பு எடுத்த கருத்துக் கணிப்பில் தி.மு.க. கூட்டணி அதிக இடங்களைப் பிடித்து மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று பல்வேறு கருத்துக் கணிப்புகள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## பா.ஜ.க.வின் கைப்பாவையாக மாறிய

# அமலாக்கத்துறை கடந்த ஆண்டில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு!

## பழிவாங்கும் நடவடிக்கை – எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மே 4-

கடந்த 2014ஆம் ஆண்டு மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு ஆட்சிக்கு வந்தது முதல், அமலாக்கத்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் பா.ஜ.க.வின் கைப்பாவைகளாக மாறிவிட்டதாக எதிர்க்கட்சிகள் தொடர்ந்து விமர்சித்து வருகின்றன.

இந்த நிலையில் ஆண்டறிக்கையை அமலாக்கத்துறை வெளியிட்டுள்ளது. அதில் கடந்த நிதியாண்டில் ஆயிரத்து 80 வழக்குகளைப் பதிவு செய்துள்ளதாகவும் இதில் 657 வழக்குகள் மட்டுமே நீதிமன்றத்துக்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 - 24 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 775 வழக்குகளில், பாதிக்கும் குறைவாக அதாவது 333 வழக்குகள் மட்டுமே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டு 300 வழக்குகள் அமலாக்கத்துறையால் கூடுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தலா 9 வழக்குகளில் மட்டுமே நீதிமன்றங்கள் தண்டனை வழங்கி உள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2005 ஆம் ஆண்டு பணப் பரிவர்த்தனை சட்டம் அமலுக்கு வந்தது முதல் கடந்த மார்ச் மாதம் வரை 8 ஆயிரத்து 851 வழக்குகளை அமலாக்கத்துறை பதிவு செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் 56 வழக்குகளில் மட்டுமே நீதிமன்றங்கள் தண்டனை வழங்கி இருப்பதும் ஆயிரத்து187 பேர் கைது செய்யப்பட்டதில் 124 பேர் மட்டுமே இது வரை தண்டிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் வழக்குப்பதிவு குறித்த அமலாக்கத்துறையின் அறிக்கை அமைந்துள்ளது.

## சூரிய சக்தி மின் உற்பத்தியில்

# தென்னிந்தியாவில் தமிழ்நாடு முதலிடம்!

## ஒன்றிய மின்சார ஆணையம் தகவல்!

சென்னை, மே 4 -

சூரியசக்தி மின் உற்பத்தியில் தென்னிந்திய மாநிலங்களிலேயே தமிழகம் முதலிடம் வகிப்பதாக ஒன்றிய மின்சார ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்தவும், புவி வெப்பமடைவதை குறைக்கவும் உலக நாடுகள் அனைத்தும் “பசுமை ஆற்றல்” நோக்கி வேகமாக பயணித்து வருகின்றன. அந்த வகையில், நிலக்கரி போன்ற இயற்கை வளங்களை சார்ந்திருக்காமல், இயற்கையாக கிடைக்கும் சூரிய ஒளியை பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதில் இந்தியா உலக அளவில் கவனம் ஈர்த்து வருகிறது. குறிப்பாக, இந்தியாவின் தென் பகுதியில் சூரிய மின்சக்தி உற்பத்தியில் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள்ளது.

அதன்படி, ஒன்றிய மின்சார ஆணையம் அண்மையில் வெளியிட்ட தரவுகளின்படி, கடந்த மார்ச் மாதத்தில் தென்னிந்திய மாநிலங்களில் மொத்தம் 613 கோடி யூனிட் சூரிய சக்தி மின்சாரம் உற்பத்தியாகி உள்ளதாம். இதில் தமிழகம் மட்டும் தனிச்சிறப்பாக 218.60 கோடி யூனிட்களை உற்பத்தி செய்து முதலிடத்தை அலங்கரிக்கிறது. கடந்த 2025ம் ஆண்டு மார்ச் மாதத்தில் தமிழகத்தின் உற்பத்தி 160 கோடி யூனிட்களாக மட்டுமே இருந்தது குறிப்பிடத்தக்கது. ஓராண்டு காலத்திற்குள் சுமார் 58 கோடி யூனிட்கள் கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மின் உற்பத்தியில் தன்னிறைவை நோக்கி வேகமாக நடைபோடுகிறது. தமிழகத்தை தொடர்ந்து கர்நாடகா 181 கோடி யூனிட்களுடன் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. ஆந்திரா 113 கோடி யூனிட்களையும், தெலுங்கானா 71 கோடி யூனிட்களையும் உற்பத்தி செய்துள்ளன.

கேரளா 29 கோடி யூனிட்களுடன் அடுத்த இடத்தில் இருக்க, புதுச்சேரி யூனியன் பிரதேசம் 10 லட்சம் யூனிட்களை பதிவு செய்துள்ளது. இந்த ஒப்பீட்டு லிஸ்ட்டில், தமிழகத்தின் பங்கு மிகப் பெரிய அளவில் இருப்பது நன்றாகவே தெரியவருகிறது. தமிழகத்தில் நிலவும் சாதகமான வானிலை தான் இந்த வெற்றிக்கு மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. ஆண்டுக்கு 300 நாட்களுக்கு மேல் சூரிய ஒளி தடையின்றி கிடைப்பதால், சூரியசக்தி மின் நிலையங்களுக்கு தமிழகம் ஒரு சொர்க்கபுரியாக மாறியுள்ளது. சூரிய சக்தி மின் நிலையங்கள் இதன் விளைவாக, பல்வேறு தனியார் நிறுவனங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நிலப்பரப்புகளில் அதிக திறன் கொண்ட சூரியசக்தி மின் நிலையங்களை அமைக்க மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மட்டுமல்லாமல், சாமானிய மக்களும் இப்போது சூரிய சக்தியின் முக்கியத்துவத்தை உணரத் தொடங்கி விட்டார்கள். கரண்ட் செலவை குறைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், வீடுகள் மற்றும் அலுவலகக் கட்டிடங்களின் மேற்கூரைகளில் சூரியசக்தி தகடுகளை பொருத்துவது தற்போது ஒரு மக்கள் இயக்கமாகவே மாறி வருகிறது என்று சொல்லலாம். கடந்த மார்ச் மாத நிலவரப்படி, தமிழகத்தின் மொத்த சூரியசக்தி மின் உற்பத்தித் திறன் 13,579 மெகாவாட் என்ற நிலையை எட்டியுள்ளது.

மழைக்காலங்களைத் தவிர்த்து மிச்ச நாட்களில் தினமும் சராசரியாக 4 முதல் 5 கோடி யூனிட் வரை மின்சாரம் தங்குதடையின்றி உற்பத்தியாகிறது. கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், தமிழகத்தின் வளர்ச்சி வியக்க வைக்கிறது. 202425 நிதியாண்டில் 1,573 கோடி யூனிட்களாக இருந்த சூரியசக்தி மின் உற்பத்தி, 2025 ஏப்ரல் முதல் இந்த ஆண்டு மார்ச் வரையிலான கால கட்டத்தில் 1,969 கோடி யூனிட்களாக உயர்ந்துள்ளது. இந்தபுள்ளிவிவரங்கள் தமிழகம் பசுமை ஆற்றல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையில் இந்தியாவிற்கே வழிகாட்டியாகத் திகழ்வதை உறுதிப் படுத்துகின்றன.

## மேற்குவங்கம் மாநிலத்தில்

# தபால் வாக்குச் சீட்டு உறைகள் அனுமதியின்றி பிரிப்பு!

## தேர்தல் ஆணையத்திடம் திரிணாமுல் காங்கிரஸ் புகார்!

கொல்கத்தா, மே 4–

கொல்கத்தாவில் உள்ள வாக்கு எண்ணும் மையத்தில் தபால் வாக்குச் சீட்டு உறைகள் அனுமதியின்றி பிரிக்கப்பட்டதாக தேர்தல் ஆணையத்திடம் திரிணமூல் காங்கிரஸ் புகார் அளித்துள்ளது.

மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் உள்ள குதிராம் அனுஷீலன் கேந்திரா முன் முகாமிட்டுள்ள திரிணாமூல் காங்கிரஸ் நிர்வாகிகள் அங்கு நேற்று தபால் வாக்குகளைக் கொண்ட 8 பெட்டிகள் கொண்டுவரப்பட்டதாகவும், அவை சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள் இல்லாத அறையில் வைக்கப்பட்டு தபால் வாக்குச் சீட்டு உறைகள் பிரிக்கப்பட்டதாகவும் குற்றம்சாட்டினர். இதைத் தொடர்ந்து, அவர்கள் போராட்டத்தை தொடங்கிய சில நிமிஷங்களில் சியாம்புகூர் தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் பூர்ணிமா சக்ரவர்த்தி தனது ஆதரவாளர்களுடன் அங்கு வந்ததால் பதற்றமான சூழல் ஏற்பட்டது.

இரு தரப்பினரிடமும் காவல் துறையினர் பேச்சுவார்த்தை நடத்திய பின் சூழல் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக இந்திய தேர்தல் ஆணையத்திடம் திரிணாமுல் காங்கிரஸ் புகார் அளித்தது. இதேபோல் வடக்கு 24 பர்கானாக்கள் மாவட்டத்தில் உள்ள பராசத் அரசுக் கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் 17 நிமிஷங்கள் சிசிடிவி கேமராக்கள் அணைக்கப்பட்டதாக திரிணமூல் காங்கிரஸ் நிர்வாகிகள் குற்றம்சாட்டினர்.

முன்னதாக முதல்வர் மம்தா பானர்ஜி தான் போட்டியிடும் பவானிபூர் தொகுதியில் உள்ள ஷகாவத் நினைவுப் பள்ளியில் சுமார் 4 மணி நேரம் தர்னாவில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.